# மிஹிந்தலை பிரதேச சபை
## அநுராதபுர மாவட்டம்

### 1 நிதிக் கூற்றுக்கள்

#### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஆகஸ்ட் 09 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 29 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

#### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மிஹிந்தலை பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

#### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

##### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

##### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் அதன் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | வருமானம் | செலவினம் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| | | | ரூபா. 000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (அ) | நிதிக்கூற்றுகளிலிருந்து விடுபாடுகள் | 06 | - | - | 861 | - |
| | -மேற்படி - | 01 | - | – | - | 599 |
| | -மேற்படி - | 01 | - | 599 | – | – |
| (ஆ) | நிதிக்கூற்றுகளில் குறைத்துக் காட்டுதல்கள் | 01 | 207 | - | - | - |
| | -மேற்படி - | 11 | - | 149 | - | - |
| | -மேற்படி - | 11 | - | - | - | 149 |
| (இ) | நிதிக்கூற்றுகளில் பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள் | 01 | 60 | - | - | - |
| | -மேற்படி - | 01 | - | 24 | - | - |
| | -மேற்படி - | 04 | - | - | 04 | - |

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

06 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,189,386 ஆக இருந்ததுடன், உப பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 28,600,780 ஆக இருந்தது.

### 1.3.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பிரதேச சபை கணக்கு முறைமைகளின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் தவிர நிலையான சொத்துக்களின் கூட்டுத் தொகை மூலதன ஈடுபாட்டிற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதிக்கு சமமாக இருக்க வேண்டிய போதும், 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 4,691,459 தொகை ஆகவும் மூலதன ஈடுபாட்டிற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி

ரூபா 7,616,283 ஆகவும் இருந்தமையால் கணக்குகள் இரண்டிற்குமிடையே ரூபா 2,924,824 ஆன வேறுபாடொன்று வெளிப்படுத்தப்பட்டது.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய உள்ளூராட்சி சேவை பங்களிப்புப் பணம் ரூபா 558,512 ஆனது கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்த போதும் பங்களிப்புப் பணம் செலுத்த வேண்டிய உத்தியோகத்தர்களின் விபரங்கள் மற்றும் பிரதேச சபையில் சேவை செய்த காலம் என்பன உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 203,461 கூட்டுத்தொகையான கொடுக்கல்வாங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.7 இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், அறிவுறுத்தல்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிகள் அதிகாரச் சட்டத்தின் 154 ஆவது பிரிவு | மாதாந்தம் ரூபா 50,000 அல்லது வருடாந்தம் ரூபா 500,000 இற்கு மேற்பட்ட நிலையான கொடுப்பனவுகளைச் செய்கின்ற போது அக்கொடுப்பனவுகளின் அடிப்படையில் 5% நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் |

சபையில் மேற்கூறப்பட்ட எல்லையினை விஞ்சி செய்யப்பட்ட ரூபா 1,582,700 தொகையான கொடுப்பனவுகளின் போது நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்பட்டிருக்க வில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

| | |
|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 237 (அ) மற்றும் (ஆ) | களஞ்சிய வழங்கலுக்காக கொடுப்பனவுகளைச் செய்கின்ற போது உரிய பொருட்கள் ஒப்பந்தப் பிரகாரம் தரமான நிலையில் களஞ்சியத்திற்கு கிடைத்தற்கும் இருப்பு பதிவேடுகளில் உள்ளடக்கட்டமைக்கும் உரிய கொடுப்பனவு உறுதிச் சீட்டில் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 06 சந்தர்ப்பங்களில் ரூபா 91,668 பெறுமதியான பொருட்களுக்கான கொடுப்பனவுகளின் போது நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | வைப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 2 வருடங்கள் கடந்திருந்த ரூபா 121,470 ஆனது திரும்பச் செலுத்தப்படாத வைப்பிணைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா

999,695 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,585,230 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 கிடைக்க வேண்டிய வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட | உள்ளவ ாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (அ) | வீதவரியும் வரியும் | - | - | - | - | - | - |
| (ஆ) | வாடகை | 3,304 | 929 | 1,746 | 886 | 890 | 31 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 475 | 527 | - | 458 | 455 | - |
| (ஈ) | ஏனைய வருமானம் | 1,352 | 7 | 1,936 | 400 | 8 | 3,175 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றமொன்றிால் 2010 திசம்பர் 31 வரை அறவிடப்பட்டு மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ள நீதிமன்றத் தண்டப்பணத் தொகை ரூபா 782,304 சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து முத்திரைக் கட்டணங்களாக ரூபா 395,413 ஆன தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.4 வீதவரி

மிஹிந்தலை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கிராம சேவையாளர் பிரிவுகள் 1992 ஆகஸ்ட் 05 ஆம் திகதிய 726/30 ஆம் இலக்க வர்த்தமானியில் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களாக பெயரிடப்பட்டிருந்த போதிலும், பிரதேச சபையால் அப்பிரதேசத்தில் அமைந்துள்ள வீதவரியினை அறவிடக்கூடிய ஆதனங்களிலிருந்து வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காததன் காரணமாக சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறான | முரண் | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறான | முரண் |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| மீண்டுவரும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனம் | 6,760 | 6,752 | 8 | 6,276 | 6,353 | (77) |
| ஏனையவை | 4,300 | 4,233 | 67 | 4,508 | 3,803 | 705 |
| உப மொத்தம் | 11,060 | 10,985 | 75 | 10,784 | 10,156 | 628 |
| மூலதனச் செலவினம் | 20,000 | 23,048 | (3,048) | 7,500 | 14,418 | (6,918) |
| மொத்தம் | 31,060 | 34,033 | (2,973) | 18,284 | 24,574 | (6,290) |

### 2.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி**

2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|---|
| (i) | பதவி நிலைத்தரங்கள் | 01 | 01 |
| (ii) | இரண்டாம் தரங்கள் | 10 | 08 |
| (iii) | ஆரம்ப தரங்கள் | 13 | 13 |
| (iv) | வேறு (அமைய / தற்காலிக) | - | 06 |
| | மொத்தம் | 24 | 28 |

## 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.5.1 செயற்பாடற்ற பௌதீக வளங்கள்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகளின் கீழ் காணப்படும் ரூபா 265,900 பெறுமதியான ஆர்.கே.80 கைரெக்ரர் மற்றும் ரேலர் என்பவற்றை பழுதுபார்த்து உபயோகத்திற்கு எடுக்க முடியுமாக இருந்தும் அவ்வாறு செய்யாமையினால் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 2.5.2 பெவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 975,016 ஆக இருந்ததுடன் 01 வருடகாலத்தை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 975,016 ஆக இருந்தது.

### 2.5.3 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,220,158 ஆக இருந்தது.

### 2.5.4 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீக ரீதியான பரிசோதனைகள் / மெய்மையாய்வுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 8,499,536 ஆக இருந்தது.

## 2.6 போதியளவான அதிகார பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

2003 மார்ச் 24 ஆம் திகதிய என்சீபீ/எல்ஜீ/18/4 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு செயலமர்வொன்றுக்கு சமூகமளிக்கும் போது அதற்காக மாகாண சபையின் முன் அங்கீகாரம் மற்றும் உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் அங்கீகாரத்துடன் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் தலைவரின் தாய்லாந்து பயணத்திற்காக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 70,000 தொகைக்காக கணக்காய்வு திகதியான 2010 யூலை 28 ஆம் திகதி வரை எவ்வித அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.7 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 30,750 நிலுவை கடைவாடகை மீதி கடை உரிமையாளர்களினால் நீதி மன்றத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தும் அப்பணத்தினை அறவீடு செய்வதற்கு 2010 திசெம்பர் 31 வரையிலும் சபை நடவடிக்கை பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 பொசன் விழாவிற்காக ரூபா 221,981 பெறுமதியான பிரதேசக் களஞ்சியங்களுக்கு பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக கூறுவிலைகள் கோரப்படும் போது மாதிரிகள் குறிப்பிடப்படாமல், கோரப்படுகின்ற பொருட்களின் பெயர்கள் மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தமையினால் போட்டியாளர்களின் கூறுவிலைகளைப் பெறமுடியாதிருந்தது.

(இ) சபை வாடகையாளர்களுடன் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் சபையின் அனுமதியின்றி எவ்வித நிர்மாணங்களும் செய்ய முடியாதிருந்த போதிலும் வியாபார நடவடிக்கைகளுக்காக வாடகைக்கு விடப்பட்டிருந்த சபைக்குச் சொந்தமான 22 கடைகள் அனுமதியின்றி நிர்மாணிக்கப்பட்டிருந்தும் ஒப்பந்தத்தின் பிரகாரம் வாடகையாளர்களுக்கு எதிராக

நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வாடகையாளருடன் கையொப்பமிட்ட ஒப்பந்தத்தின் 22 ஆம் பந்தியின் பிரகாரம் கடைகள் அல்லது அதன் ஒரு பகுதியோ உபகுத்தகைக்கு வழங்க முடியாதிருந்த போதும் கடைகள் உபகுத்தகைக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 2.8 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் மக்களின் வசதிக்காக நலன்புரி நடவடிக்கைகளுக்குரிய நடவடிக்கைகள் மற்றும் சுகாதாரம், பொது வீதிகள் பொதுப் பயன்பாடு சேவைகளுக்குரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக எதிர்வரும் வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கிய கூட்டுத்திட்டமொன்றையும் அத்திட்டத்தினை மீளாய்வாண்டில் அமுல்படுத்தபடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.9 ஒப்பந்த நிருவாகம்

மிஹிந்தலை பஸ் நிலையத்திற்கு முன்பாக நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த பொருளாதார நிலையக் கட்டிடத்திற்காக மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் ரூபா 3,545,598 செலவிடப்பட்டு நிலையத்தின் கீழ்மாடிக்கு தூண்கள் போடப்பட்டு கொங்ரீட் தட்டு இடப்பட்டயின் நிர்மாண செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்தமையினால் உரிய பொருளாதார நிலையத்தினைச் செயற்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு